வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    01.11.2024 வெள்ளிக்கிழமை    இதழ் : 305    பக்கங்கள் : 12




# நாட்டில் பொய்களை பரப்பி அராஜகத்தை ஏற்படுத்த சதி!

## ஜனாதிபதி அநுர குமார சாடல்



கொழும்பு, நவம்பர் 01

**புதிய அரசாங்கத்துக்கு பலமான அதிகாரத்தை வழங்காமல் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் சில அரசியல் வாதிகளும் ஊடக நிறுவனங்களும் நாட்டில் அராஜகத்தை ஏற்படுத் துவதற்காக பொய்யான செய்திகளை பரப்பி வருகின்றனர் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

மாத்தறையில் நடந்த பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“சில நிறுவனங்களில் மட்டுமே அதிகாரத்தை உறுதி செய்துள்ளோம். ஜனாதிபதி, அமைச்ச ரவை, பாராளுமன்றம், மாகாண சபைகள் மற் றும் உள்ளூராட்சி மன் றங்கள் போன்ற பல நிறு வனங்களில் பலமான அதி காரம் உறுதி செய்யப் படும்போது அரசியல் அதிகாரம் நிலைநாட்டப் படுகிறது. எங்களிடம் ஜனாதிபதி பதவியும் சிறிய அமைச்சரவையும் மட்டுமே உள்ளது. பாராளுமன்றம் 11

## லொஹான் ரத்வத்த கைது!

கொழும்பு, நவ. 01

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத் வத்த நேற்று பிற்பகல் கண்டியில் வைத்து கைது செய் யப்பட்டார்.

நுகேகொடை மிரிஹானவில் உள்ள அவரது மனை வியின் இல்லத்தில் இலக்கத் தகடு இல்லாத வாகனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தின் பின்ன ணியில் இந்த கைது இடம்பெற்றுள்ளது. 11

## வடக்கு, கிழக்கில் 5 முதல் கனமழை!

யாழ்ப்பாணம், நவ. 01

எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் கன மானது முதல் மிகக்கனமானது வரையான மழை வீழ்ச்சி கிடைக்கும் என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவர் கலாநிதி நா. பிரதீபராஜா தெரி வித்துள்ளார். 11

அதானி காற்றாலை மின் திட்டம்:

## ஆராய்வதற்கு புதுடில்லி செல்லும் உயர்மட்ட குழு

கொழும்பு, நவ. 01

இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் பணி தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்த எதிர் வரும் ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்ட குழுவொன்று புதுடில்லி செல்ல உள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மன்னாரில் காற் றாலை மின்னுற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற் கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இத் திட்டத்தின் ஊடாக 250 மெகாவாட் 11

## பாடசாலைகள் இன்று வழமைபோல இயங்கும்!

யாழ்ப்பாணம், நவ. 01

வடக்கு மாகாணத்தில் இன்றைய தினம் பாடசாலை கள் வழமை போல இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

தீபாவளியை முன்னிட்டு கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தமிழ் பாட சாலைகளுக்கு இன்றைய தினம் விடுமுறை அளிக் கப்பட்டது. இதற்கு பதிலாக எதிர்வரும் 9ஆம் 11

## ரூ. 100 கோடி பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது

கொழும்பு, நவ. 01

சுமார் 100 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோ யின் போதைப் பொருளை விசேட அதிரடிப் படையி னர் கைப்பற்றியுள்ளனர்.

காணி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலை யில் 40 கிலோ ஹெரோயின் போதைப் பொரு ளையே விசேட அதிரடிப் படையினர் 11

## வயாவிளான் - அச்சுவேலி வீதி இன்று திறக்கப்படுகின்றது!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், நவ. 01

வயாவிளான் - அச்சுவேலி வீதி நோக்கி செல்லும் சுமார் 2 கிலோமீற்றர் தூர வீதி இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க 11







## எரிபொருட்களின் விலை குறைப்பு!

கொழும்பு, நவ. 01

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சில எரி பொருட்களின் விலை கள் குறைவடைந்தன.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பின்படி,

95 ஒக்ரேன் பெற் றோலின் விலை லீற்றர் ஒன்று 6 ரூபாய் குறை வடைந்து 371 ரூபாயாக வும் சுப்பர் டீசலும் லீற் றர் ஒன்று 6 ரூபாய் குறைவடைந்து 313 ரூபா யாகவும் நிர்ணயிக் கப்பட்டுள்ளன.

இதேவேளை, 11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அந்த பெண்கள் கல்லூரியின் அதிபருக்கு அங்கு கல்வி கற்கும் மாணவிகளின் போக்கு புரியவில்லை.

கழிவறை கண்ணாடியில் உதட்டுச்சாயம் பூசிய உதடுகள் படம் எல்லா இடத்திலும் இருக்கும், கல்லூரியின் துப்புரவாளர் எத்தனை முறை துடைத்து வைத்தாலும் அடுத்த நாளிலும் இதே பிரச்னை.

கல்லூரியில் சில குறும்புக்கார மாணவிகள் தமது உதட்டுக்குச் சாயத்தைப் பூசிக் கொண்டு கண்ணாடியில் முத்திரை பதித்துவிட்டு செல்வது வழக்கம்.

கல்லூரி அதிபரோ வகுப்பு வகுப்பாக சொல்லியும் உபயோகமில்லை.

துப்புரவாளருக்கு இது தேவையில்லாத வேலை.

அன்று காலை ஒவ்வொரு வகுப்பாக சென்று மாணவிகள் செய்யும் குறும்பால் தான் எப்படி கண்ணாடியை சுத்தம் செய்கிறார் என்று காண்பித்தார்.

தான் துப்புரவு செய்யப் பயன்படுத்தும் 'மப்பை' கழிவறை தொட்டியில் நனைத்து கண்ணாடியை சுத்தம் செய்தார்.

இப்போதெல்லாம் மாணவிகள் கண்ணாடியை முத்தமிடுவதேயில்லை.

இந்தக் கதையைப் படிக்கின்ற போதில் எல்லாம் அந்தக் கதையில் வருகின்ற துப்புரவாளர்போல அறிவாளிகள் நமக்கு கிடைக்க மாட்டார்களா? நமது அரசியலை சுத்தம் செய்வதற்கு என்று நினைப்பதுண்டு.

அண்மையில், மட்டக்களப்புக்கு சென்றபோது சந்திக்கின்ற ஒவ்வொருவரிடமும் கேட்கின்ற கேள்வி, இங்கு அரசியல் நிலைமைகள் எப்படியிருக்கின்றன என்பது பற்றித்தான். ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்தவாறு அல்லது தாம் கேள்விப்பட்டவற்றையே சொல்லிக்கொண்டிருந்தனர். சிலர் தமிழ் அரசு ஒரு வாக்கு என்றாலும் அதிகம் பெறும் அதனால், இரண்டு ஆசனங்களைப் பெறும் என்று கூறினார்கள். வேறு சிலரோ சங்கு சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி அதிகம் பெறும், அதனால் அதற்குத் தான் இரண்டு ஆசனங்கள் கிடைக்கும் என்றார்கள்.

இவ்வாறு கேட்கின்றபோது அவரவர் எந்தக் கட்சிக்கு ஆதரவாக இருக்கின்றார்களோ அந்தக் கட்சியையே சொல்வார்கள் என்பது தெரிந்தது தான்.

ஆனால், தமிழ் அரசு கட்சியா, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியா அதிகம் பெறும் என்பதல்ல நாம் அறிய நினைத்தது. தேசிய கட்சிகளான தேசிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் எப்படியிருக்கின்றது நிலைமை என்பதைத் தான் அறியவேண்டும் போல இருந்தது.

தேசிய மக்கள் சக்திக்கான மக்கள் ஆதரவு அலை தெற்கில் வீசியதன் தாக்கம் வடக்கு - கிழக்கிலும் இந்தத் தேர்தலில் எதிரொலிக்கும் என்று ஜெகான் பெரேரா போன்ற அரசியல் ஆய்வாளர்கள் தொடர்ந்து எழுதிவருவதால், அப்படியொரு நிலைமை இருக்கின்றதா என்பதை அறிந்துகொள்வதே எமது நோக்கமாக இருந்தது.

கிழக்கில் அப்படியொரு நிலைமை இருக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக இருக்கின்றது. ஆனால், அது இளையவர்கள் மத்தியில் மாத்திரமே இருக்கிறது என்ற விடயம் பரவலாக பேசப்படுகின்றது. இப்போதெல்லாம் இளைஞர்கள் மத்தியில் ஒரு 'ட்ரெண்ட்' இருக்கின்றது. அதாவது, எந்தவோர் இளைஞன் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக பொது வெளியில் அல்லது சமூக வலைத்தளங்களில் பேசுகின்றானோ, அவன் இளையவர்களால் கூர்ந்து கவனிக்கப்படுகின்றான். அதாவது, எதிரெதிர் பால் கவர்ச்சியால் கவனிக்கப்படுகின்றனர்.

இதனாலேயே அவர்கள் தம்மை தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவானவர்களாகக் காட்டிக்கொள்கின்றனர். அவர்களில் பலர் தேர்தலில் வாக்களிக்கவே செல்வதில்லை என்றும் இளைஞர்களில் வாக்களிப்பவர்கள் வாக்களிக்க செல்லும்போது பெற்றோரிடம் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்று கேட்டுவிட்டு வாக்களிப்பவர்களே வாக்களிக்க செல்கின்றனர் எனவும் விளக்கம் தந்தார். ஒரு சமூக சேவையில் நீண்டகாலம் ஈடுபட்டு வருகின்ற ஒருவர்.

அதுவல்ல இங்கே முக்கியமாக நாம் சொல்ல வருவது, தேசிய கட்சிகளில் "போட்டியிடுகின்ற தமிழர்களில் அந்தக் கட்சிக்கு வாக்களிக்கும் தமிழர்களே விருப்பு வாக்களிப்பார்கள். அவர்களில் போட்டியிடும் முஸ்லிம்களுக்கே முஸ்லிம் வாக்காளர்கள் விருப்பு வாக்களிப்பார்கள். அவ்வாறு விருப்பு வாக்களிக்கின்றபோது, தமிழர்களின் வாக்குகளையும் சேர்த்து ஒருவர் வெற்றிபெற்றால், அவர்களில் ஒரு முஸ்லிம் வேட்பாளரே எம். பியாவார். முன்னர் பிள்ளையான் வெற்றிலை சின்னத்தில் போட்டியிட்டபோது, அவரின் வாக்குகளில் ஹிஸ்புல்லா எம். பியானதுபோல..."

அவர் சொன்ன இந்த விடயம்தான் எங்கேயோ இடித்தது.!

இந்த சிவில் சேவையாளர் போன்றவர்கள் தான் நமக்கு தேவை என்று நினைக்கத் தோன்றியது. அந்த துப்பரவாளர்போல...

**- ஊர்க்குருவி.**

## பலாலியில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாயம் செய்வது குறித்து உரையாடல்!

*யாழ்ப்பாணம், நவ. 01*

பலாலியில் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் விவசாய நடவடிக்கைக்காக விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நேற்றுமுன்தினம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில், விடுவிக்கப்பட்ட பகுதிகள் பற்றைக் காடாகக் காணப்படுகின்றன. இதனால், பாதைகளை அடையாளம் காண முடியவில்லை. எனவே, பாதைகளை பிரதேச சபை துப்பரவு செய்யும். இதான் பின்னர், பொதுமக்களின் காணிகள் மாவட்ட செயலகத்தால் துப்பரவு செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படும்.

மேலும், மீளளிக்கப்படுகின்ற விவசாய காணிகளுக்குள் மக்கள் விவசாயத்தில் ஈடுபடக்கூடிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அதன்படி மின்சார வசதியை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ். மாவட்ட அரச அதிபர், உள்ளூராட்சி ஆணையாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர், ஆளுநரின் உதவிச் செயலாளர், வலி. வடக்கு பிரதேச சபையின் செயலாளர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## காங்கேசன்துறை சுங்கத்தில் ஊழல்; பொது மக்களுக்கு பெரும் இன்னல்!

*யாழ்ப்பாணம், நவ. 01*

காங்கேசன்துறை சுங்க அதிகாரிகளின் ஊழல் நடவடிக்கையால் பொதுமக்கள் திட்டமிட்டு தாமதப்படுத்தப்படுகின்றனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காங்கேசன்துறை சுங்கத்தில் இரு கருமபீடங்கள் உள்ளன. இந்தியாவிலிருந்து வரும் பயணி ஒருவரிடம் 35 முதல் 40 நிமிடம் வரை விசாரணை நடக்கிறது. அடிப்படை வசதிகளற்ற அமர்வதற்கு கதிரைகள்கூட இல்லாத நிலையில் பொதுமக்கள் நீண்டநேரம் நின்றபடி இருக்க வேண்டியுள்ளது என்றும் மக்கள் கூறுகின்றனர்.

இதேநேரம், சில பொருட்களுக்கு அதிகளவில் வரி விதிக்கப்படுகின்ற போதிலும் பாதித் தொகைக்கே பற்றுச்சீட்டு வழங்கப்படுவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேலும், பயணிகள் கொண்டு வரும் சிறுதொகை பழங்களையும் அதிகாரிகள் பறித்துக் கொள்கின்றனர் என்றும் தொழில் ரீதியாக இந்தியாவுக்கு செல்பவர்களிடம் சுங்க அதிகாரிகள் இலஞ்சம் கோருகிக்னறனர் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## மணல் ஏற்றி சென்ற நால்வர் கைது!

*கிளிநொச்சி, நவ. 01*

கிளிநொச்சி - கல்லாற்று பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிச் சென்ற நால்வர், டிப்பர் வாகனங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைவாக இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.11.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அநுர அரசாங்கத்தின்மீதான நெருக்குதல்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அதுவும் தபால் மூல வாக்களிப்புக்கு முன்னதாக அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை அங்கீகாரம் வழக்கியது. அடுத்த ஜனவரி முதல் அந்த சம்பள உயர்வு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அரசாங்க ஊழியர்களின் தபால் மூல வாக்குகளை குறிவைத்தே அந்தத் தீர்மானத்தை அன்றைய அமைச்சரவை எடுத்ததாக விமர்சனங்களும் வெளியாகின.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த விக்கிரமசிங்க அந்த சம்பள அதிகரிப்பை வழங்குவதற்காக நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் அரசாங்கம் அந்த சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இப்போது வலிறுத்துகிறார். சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் உரிய நடைமுறைகளை பின்பற்றிப் பெறப்படவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய கூறியிருக்கும் அதேவேளை சம்பள அதிகரிப்புக்காக நிதி ஒதுக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி கூறுகின்றபோதிலும் அவ்வாறு நிதி எதுவும் ஒதுக்கப்பட்டதாக இல்லை என்று ஜனாதிபதி திஸநாயக்க கூறுகிறார்.

ஆனால், அரசமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் முறைப்படியாகவே அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதாக பதிலளித்திருக்கும் விக்கிரமசிங்க, பிரதமருக்கு அரசமைப்பு குறித்து பாடம் எடுக்கத் தயாராக இருக்கிறாரெனவும் குறிப்பிட்டார். விக்கிரமசிங்க நீண்டகால அரசியல் அனுபவத்தையும் பலதுறைகளிலும் ஆழமான அறிவையும் கொண்டவர் என்ற போதிலும் மற்றவர்களை விடவும் தனக்கு எல்லாம் தெரியும் என்ற தோரணையில் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார். இதை அவரின் அனுபவத்துக்கு பொருத்தமில்லாத ஒரு பக்குவக் குறைவு என்றே கருதவேண்டியிருக்கிறது.

அவரின் கருத்துக்கு பதிலளித்திருக்கும் பிரதமர் 17 தடவைகள் மக்களால் நிராகரிக்கப்பட்ட விக்கிரமசிங்கவிடம் இருந்து தான் ஒருபோதும் ஆலோசனையை பெறப்போவதில்லை என்று அவமதிக்கும் தொனியில் கூறியிருக்கிறார். அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு விவகாரம் தற்போது பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்திருக்கும் நிலையில் முக்கியமான பிரசார விடயமாக மாறியிருக்கிறது.

புதிய பாராளுமன்றத்தில் அடுத்த வருடம் முற்பகுதியில் சமர்ப்பிக்கப்படும் பட்ஜெட்டில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிப்பதற்கான நிதி ஒதுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். நாட்டில் உறுதிப்பாடின்மையை ஏற்படுத்துவதற்காக சில அரசியல்வாதிகளும் ஊடகங்களும் தவறான செய்திகளைப் பரப்புகின்றனரெனவும் திஸநாயக்க குற்றஞ் சாட்டுகிறார்.

சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் மாத்திரமல்ல, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள், இஸ்ரேலியர்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவதற்கு தீட்டப்பட்டதாகக் கூறப்படும் திட்டம் தொடர்பிலான புலனாய்வு அறிக்கைகளை அடுத்து தோன்றியிருக்கும் பாதுகாப்பு பிரச்னை, அரிசி, முட்டை, தேங்காய் போன்ற பெருட்களின் விலைகள் உயர்வு என்று பல்வேறு பிரச்னைகளைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் ஒரு மாத கால அரசாங்கத்துக்கு கடுமையான நெருக்குதல்களை கொடுக்க ஆரம்பித்திருக்கின்றன. தேர்தல் பிரசாரக் காலம் என்பதால் அவற்றுக்குப் பதிலளிக்காமல் இருக்கவும் அரசாங்கத்தாலும் அல்லது தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகளாலும் முடியவில்லை.

ஜனாதிபதி அநுர குமாரவின் அரசாங்கம் உலகிலேயே மிகவும் சிறிய அமைச்சரவையை கொண்டது. அது பதவியேற்று ஒரு மாத காலத்துக்குள் கடுமையான நெருக்குதல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. தேசிய மக்கள் சக்தியால் நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு முகங்கொடுத்து உருப்படியாக ஆட்சி செய்யமுடியாது என்று மக்களுக்குக் காட்டுவதற்கு எதிர்க்கட்சிகள் அவற்றால் இயன்றவரை பிரசாரங்களை தீவிரப்படுத்தியிருக்கின்றன. இத்தகைய பிரசாரங்கள் மூலமாக பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மையை பெறுவதை தடுப்பதே எதிர்க்கட்சிகளின் உண்மையான நோக்கம்.

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024

"மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்."
- *சீனப் பழமொழி*



# மாவீரர்களின் நினைவாகவும் ஆளுக்கொரு மரம் நடுவோம்!

## தமிழ் தேசிய பசுமை இயக்கம் அழைப்பு

*யாழ்ப்பாணம், நவ. 01*

மாவீரர்களை போற்றும் இப் புனித கார்த்திகையில் பண்பாட்டின் தொடர்ச்சியைப் பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண மர நடுகை மாதம் இன்று ஆரம்பமாகிறது. இதையொட்டி அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில், போரின் முற்றுகைக்குள்ளும் இயற்கை எனது நண்பன் என்று சொல்லி சூழல் நல்லாட்சி ஆணையம், வனவள பாதுகாப்புப் பிரிவு என்பனவற்றை உருவாக்கி எமது சூழலைப் பேணிப் பாதுகாத்த தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள். மரங்களை ஆதித் தெய்வங்களாக வழிபட்ட நாம் இறந்தவர்கள் நினைவாக மரங்களை நாட்டும் தொல் மரபையும் கொண்டிருந்தோம். இந்தப் பண்பாட்டு மரபே காலநிலை மாற்றங்களின் தாக்குதல்களில் இருந்து எம்மையும் எம் பூமியையும் காப்பாற்றும் அந்த வகையில் மாவீரர்களை போற்றும் இப் புனித கார்த்திகையில் பண்பாட்டின் தொடர்ச்சியைப் பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம்.

துருவ பகுதிகளில் உள்ள பனிமலைகள் உருகி வருவதன் காரணமாகக் கடல் மட்டம் உயர்ந்து செல்கிறது. இதனால் , உலகநாடுகள் பலவற்றின் கரையோரங்களை கடல் நீர் விழுங்கத் தொடங்கியுள்ளது. இதற்கு இலங்கைத் தீவும் விதிவிலக்கல்ல.

கடல் மட்ட உயர்வால் யாழ். குடாநாடு ஆனையிறவுப் பகுதியில் கடலால் துண்டிக்கப்பட்டுத் தனித் தீவாக உருவாகும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலகம் இன்று அனுபவிக்கத் தொடங்கியுள்ள இந்த அவலங்களுக்குக் கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளை அளவுகணக்கில்லாமல் நாம் அழித்துத் தள்ளுவதே அடிப்படைக் காரணமாகும் - என்று குறிப்பிட்டுள்ளார்.

## சாவகச்சேரி நீதிமன்றுக்கு மிரட்டல் விடுத்தவர் தொடர்பில் விசாரணை

*தென்மராட்சி, நவ. 01*

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்துக்கு மிரட்டல் விடுத்தவரை தேடி விரிவான விசாரணைகள் ஆரம்பித்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு கடந்த 29ஆம் திகதி அடையாளம் தெரியாத ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்து நீதிமன்றில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று தகவல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், குறித்த தொலைபேசி அழைப்பை வழங்கிய நபர் யார் என்பது இதுவரையில் கண்டுபிடிக்கப்படாத நிலையில் பொலிஸாரை தவறாக வழிநடத்தும் நோக்கில் இந்த தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகநபர் தொடர்பில் தற்போது விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## துர்க்காதேவி ஆலய கந்த சஷ்டி திருவிழா

*தென்மராட்சி, நவ. 01*

சாவகச்சேரி தாளையம்பதி துர்க்காதேவி தேவஸ்தான கந்த சஷ்டி விழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை,வசந்த மண்டப பூஜை நடைபெற்று சுவாமி உள்வீதி உலா வருவார்.

எதிர்வரும் வியாழக்கிழமை சூரசம்ஹாரமும் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளன. (ஐ)

## வேம்படி கந்தசுவாமி ஆலய கந்த சஷ்டி விழா

*தென்மராட்சி, நவ. 01*


மட்டுவில் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் கந்த சஷ்டி விழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

தினமும் பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம், விசேட பூசை, வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி உள் வீதியுலா வருவார்.

6ஆம் நாளான எதிர்வரும் வியாழக்கிழமை சூரசம்ஹாரமும் மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளன.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவம்பர்- 01 வெள்ளிக்கிழமை**
குரோதி வருடம் - ஐப்பசி 15
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : அமாவாசை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். மனைவி வழியில் அனுகூலமுண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள்.

**கடகம்**
பழைய நினைவுகளின் இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். கடன்கள் வசூலாகும். பயணங்களால் அலைச்சல்.

**சிம்மம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். மனநிறைவு ஏற்படும் நாள்.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். பழைய பிரசச்னைகள் தீரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித்தருவீர்கள். லாபம் கிடைக்கும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மறதியால் பிரச்னைகள் வந்து நீங்கும். குடும்பத்தினருடன் இணக்கமாக செல்லவும். அடுத்தவர்கள் மனசு காயப்படும் படி பேசாதீர்கள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். விலை உயர்ந்தப் பொருட்களை கவனமாக கையாளுங்கள். உடல் சோர்வு வந்து விலகும். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம்.

**தனுசு**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். புகழ், கௌரவம் கூடும் நாள்.

**மகரம்**
உங்களி எதையும் தாங்கும் மனோ பலமும் கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும் பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள்கிடைக்கும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தீபாவளியை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள்





முல்லைத்தீவு, நவ. 01

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தீபாவளியை முன்னிட்டு நேற்று சிறப்பு பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இதன்போது, முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ. ஜி. சந்திரசேன தலைமையில் பொலிஸாரும் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 10 பொலிஸ் நிலைய பிரிவுகளிலுள்ள தமிழ்ப் பொலிஸார் இணைந்து தீபாவளியை முன்னிட்டு தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பொதுமக்களுக்கும் நாட்டுக்காகவும் வேண்டி விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இந்த வழிபாட்டில் பொது மக்கள், முல்லைத்தீவு மாவட்ட பொலிஸார் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பூஜை வழிபாடுகளின் பின்னர் ஆலய வளாகத்தில் வைத்து பொலிஸாரால் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (எ)

# உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு கிளிநொச்சியில் கண்காட்சி, விற்பனை

கிளிநொச்சி, நவ. 01

தீபாவளி தினத்தையொட்டி கிளிநொச்சி மாவட்டத்தின் சௌபாக்கியா உற்பத்தி கிராம சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கண்காட்சி மற்றும் விற்பனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் அறிமுகப் படுத்தப்பட்ட சௌபாக்கியா உற்பத்தி கிராம வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை கண்காட்சி பசுமை பூங்கா வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச. மோகனபவன் தலைமையில் நடைபெற்ற இந்த கண்காட்சி மற்றும் விற்பனையில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு விற்பனைக் கண்காட்சியை நாடாவெட்டி திறந்து வைத்தார். ஓய்வு பெற்ற திட்டமிடல் பணிப்பாளர் கி. சிறீபாஸ்கரன், விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சோதி விஜயதாஸன், மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் ச. சசீபன், கண்டாவளை பிரதேச கால்நடை மருத்துவ அதிகாரி கஜஞ்சன் ஆகியோர் சிறப்பு விருத்தினர்களாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், துறை சார்ந்த திணைக்கள உத்தியோகத்தர்கள், சுய தொழில் முயற்சியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# விவசாயக் குடும்பத்தை சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

## யாழில் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 01

யாழ்ப்பாணத்தில் வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் இவ்வாறு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. தகைமையுடைய விண்ணப்பதாரிகள் கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பங்களைப் பெற்று பெற்றோர் அங்கத்தவராக உள்ள கமக்கார அமைப்பு, தத்தமது பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் மற்றும் கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை உரிய கமநல சேவைகள் நிலைய கமநல உத்தியோகத்தரிடம் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்ப முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அம்மன் ஆலயத்தில் பொலிஸார் வழிபாடு

யாழ்ப்பாணம், நவ. 01

தீபாவளியை முன்னிட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரின் ஏற்பாட்டில் பண்ணாகம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்தில் நேற்றையதினம் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

நாட்டில் அமைதி நிலவ வேண்டி இந்த பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.


வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி கொஸ்தா தலைமையில் இந்த வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இதில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ- 05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளைப் பறிக்காதீர்!

## அரசிடம் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை



கொழும்பு, நவ. 01

**முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை இரத்து செய்யக்கூடாது என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு வழங்கப்பட்ட சலுகைகளை அரசாங்கம் நீக்கியதன் காரணம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சந்திரிகாவின் கணவரின் கொலையுடன் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தொடர்புபட்டுள்ளது. அவருக்கும் குண்டுவெடிப்பினால் கண்ணில் காயம் ஏற்பட்டுள்ளது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எனக்கு ஒருபோதும் ஆதரவளிக்கவில்லை. மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்காக மட்டுமே நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளோம்.

அதேநேரம், மகிந்த ராஜபக்ஷ, மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை இழந்தமை வேறு விடயம், எனினும் அவர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தமையை கருத்திற் கொண்டு அவரின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளவேண்டும்.

எனக்கு எவ்வித சலுகைகளும் தேவையில்லை. எனினும் ஏனைய ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்-என்றார். (அ)

# இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு வாய்ப்பு

கொழும்பு, நவ. 01

நேற்று முதல் அடுத்த சில நாட்களில் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிற்பகல் வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய நிலைமை உருவாகி வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள, பொது மக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# ரூ.210 மில்லியன் பெறுமதியான போதைப்பொருட்கள் சிக்கின!

## ஹரக் கட்டாவின் உதவியாளர்கள் கைது

கொழும்பு, நவ. 01

210 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் ஹரக் கட்டாவின் உதவியாளர்கள் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் நந்துன் சிந்தக விக்கிரமரத்ன என்ற ஹரக் கட்டா மற்றும் அவரது போதைப்பொருள் வியாபாரத்தை பராமரித்து வந்த பாதாள உலக உறுப்பினரான "ஆமி சூட்டி"யின் உதவியாளர்கள் என்பது தெரியவந்துள்ளது.

கைதான சந்தேக நபர்களிடம் இருந்து 6.910 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 1.17 கிலோ ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது. (அ)

# வர்த்தகரின் இல்லம் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

கொழும்பு, நவ. 01

ஹோமாகம, மீகொட - படவல பகுதியில் அமைந்துள்ள வர்த்தகர் ஒருவரின் இல்லத்தின் மீது நேற்று அதிகாலை அடையாளம் தெரியாத நபர்களால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் வீட்டின் மீது நான்கு முறை துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூடு நடந்த போது வீட்டில் யாரும் இருக்கவில்லை என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வர்த்தகரை அச்சுறுத்தும் நோக்கில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மத்திய கிழக்கில் உள்ள இலங்கையரை அழைத்து வருவதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, நவ. 01

மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெற்றுவரும் யுத்த நிலை காரணமாக அங்குள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பொது முகாமையாளரான சேனாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளில் இடம்பெற்றுவரும் யுத்த நிலை காரணமாக அங்குள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், அங்குள்ள இலங்கையர் யாருக்காவது நாட்டுக்கு வரவேண்டிய தேவை ஏற்பட்டால் அவர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேல், லெபனான் நாடுகளுக்கிடையில் இடம்பெற்று வரும் மோதல் காரணமாக அங்கு தொழிலுக்கு சென்றிருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பாக தொடர்ந்தும் தூதரகங்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையர்கள் யாருக்கும் இதுவரை எந்த பாதிப்பும் இல்லை என்ற தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

லெபனானில் 7 ஆயிரம் பேர் வரையான இலங்கையர்கள் உள்ளார்கள் என்றும், இந்த வருடம் ஒக்ரோபர் 29 ஆம் திகதிவரை ஆயிரத்து 116 பேர் லெபனானுக்கு தொழில் நிமித்தம் சென்றுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

எனினும் தற்போது அங்கு இடம்பெறும் யுத்த நிலைமை காரணமாக லெபனானுக்கான பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் தொழில் பதிவுகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை நிறுத்தம்

கொழும்பு, நவ. 01

நாடளாவிய ரீதியாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் முன்னெடுத்திருந்த தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் நள்ளிரவுடன் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளை கருத்திற் கொண்டு குறித்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக குறித்த சங்கத்தின் செயலாளர் சஞ்சய ஐயசுந்தர தெரிவித்தார்.

நேற்று முன் தினம் மாலை 4.30 மணி முதல் பயணச்சீட்டு விநியோக நடவடிக்கைகளில் இருந்து விலகவுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் முன்னதாக அறிவித்திருந்தது.

பல கோரிக்கைகள் தொடர்பாக போக்குவரத்து அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் ரயில் திணைக்களத்தின் நிறைவேற்று அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடல் தோல்வியடைந்ததன் காரணமாகவே நிலைய அதிபர்கள் இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருந்தனர். (அ)

பாராளுமன்றத் தேர்தல் 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பண பலம் இல்லை! படை பலம் இல்லை!
பன்னாட்டு நிறுவனங்களின் பின்னணியும் இல்லை!
உங்கள் வாக்குப் பலத்தை மட்டும் நம்பியே
நாம் களத்தில்
சுயேச்சைக் குழு -14 X
தேசியம் - சூழலியம் - சுயநிர்ணயம்
இவையே எம் இலட்சியம்


நா.பார்த்தீபன்
கூட்டுறவாளர்
06 X
பொ.ஐங்கரநேசன் M.Sc, PGDJMC
சூழலியலாளர்
01 X
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையை விரும்பாதவர்களுக்கு எமது மக்கள் பதில் வழங்குவார்கள்!

## கூறுகிறார் செல்வம் அடைக்கலநாதன்




வவுனியா, நவ. 01

**தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிபலித்திருப்பதை தேர்தலின் பின்னர் பார்க்க முடியும். அனுர அரசாங்கமும் சிங்களத் தேசிய வாதத்தையே பின்தொடர்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் வேட்பாளருமான செல்வம் அடைக்கலநா தன் தெரிவித்தார்.**

இன்று வவுனியாவில் அமைந் துள்ள அவரது அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தமிழ்க் கட்சிகள் ஒற்றுமை தொடர்பாக காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளின் சங்கத்தின ரால் வெளியிடப்பட்டுள்ள ஆதங்கம் உண்மையானது. அதனை நாம் ஏற்றுக்கொள்கின் றோம்.

இந்த தேர்தலில் தமிழ்க் கட் சிகளாகிய நாம் அனைவரும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழே போட்டியிடுவோம் என்று முயற்சிகளை எடுத்திருந்தோம். அது சாத்தியப்படவில்லை. எனவே அது மனவேதனையை அழிக்கிறது. இருப்பினும் நாம் ஐந்து கட்சிகள் தற்போது ஒன் றாக இருக்கிறோம். ஏனையவர் களையும் உள்ளேகொண்டுவரு வதற்கான முயற்சிகளை தொடர்ந் தும் செய்வோம்.

தேர்தலின் பின்னராவது தமிழ்க் கட்சிகள் இணைந்து செல்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படவேண்டும். அத்துடன் தேர்தலின் பின்னர் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிப லித்திருக்கும். அவ்வாறு மக்கள் பாடம் புகட்டும்போது ஒற்று மையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்ப்படலாம். எனவே மக்களின் விருப்பத்திற்கு மாறாக செயற்படுபவர்களை அவர்களே பார்த்துக்கொள்வார் கள்.

கடந்த அரசாங்கத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசாங்கமும் புதிய ஜனாதிபதியும் அது தொடர்பான கருத்துக்களை கூற மறுக்கின்றனர். எனவே அரச ஊழியர்களுக்கு அதிகரிக் கப்படவுள்ளதாக சொல்லப் பட்ட ஊதியம் கூட்டப்பட வேண்டும். எமது கட்சி இதற் காக தொடர்ந்தும் குரல்கொ டுக்கும்.

பாராளுமன்றத் தேர்தலில் ஆசனங்களை கூடுதலாக எடுக் கவேண்டும் என்பதை நோக்க மாக கொண்டே ஊழல் விசா ரணைகள் ஆரம்பிக்கப்படும் என அரசால் காட்டப்பட்டுகி றது. அத்துடன் மாகாண சபை முறைமையை ஒழிக்கவேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் குரலாக உள்ளது. குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிக்கவேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் இவர்களே. ஆனால் அதனை நீக்குவதற்கான சூழலில் அவர்கள் இருப்பது போல தெரியவில்லை.

இடதுசாரித்துவத்தினை அடித்தளமாக கொண்டு உரு வாக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி இன்று சிங்கள தேசிய வாதத்தோடு இணைந்து செயல் படுகின்றது. அந்தவகையில் திட மான ஒரு அரசாங்கம் அமைவ தற்கான வாய்ப்புக்கள் குறைவா கவே இருக்கும்-என்றார். (அ)

# அநுர அரசின் செயல்பாடுகளில் எந்தவிதமான மாற்றமும் இல்லை

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு




யாழ்ப்பாணம், நவ. 01

மாற்றம் என்ற கோசத்தோடு புதிதாக வந்துள்ள அனுர அர சின் செயற்பாடுகளில் எவ்வித மாற்றமுமில்லை. ஆட்சி மாறி யுள்ளதே தவிர காட்சிகள் மாற வில்லை என ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார் பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச்செயலாள ரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவா ஜிலிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சி ஊடக இல்லத் தில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பயங்கரவாத தடைச்சட் டத்தை முற்றாக நீக்கவேண்டும் என ஆட்சிக்கு வருவதற்கு முன் னர் கூறியவர்கள் இன்று பாரா ளுமன்றம் தீர்மானித்தால் அது தொடர்பில் பார்க்கலாம் என பின்வாங்கியுள்ளனர்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை கூட நிறைவேற்றப்போவதில்லை என கூறுகின்றனர். இனப்படு கொலை செய்த இராணுவத்தை காப்பாற்றும் நோக்கில் வெளி நாட்டு விசாரணை இல்லை என் றும் உள்நாட்டு விசாரணையே நடத்தப்படும் என்று கூறி வரு கின்றனர்.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பேசியவர்கள் இப் போது மௌனமாக உள்ளனர்.

பிரதமர் ஹரிணி ஜே.வி. பியின் இனவாதம் தொடர்பில் ஆராட்சி கட்டுரை எழுதியே கலாநிதிப் பட்டம் பெற்றிருந் தார்.

புதிய மொந்தையில் பழைய கள் என்ற வகையிலேயே இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

போரில் கொல்லப்பட்டவர் களுக்கு இந்த அரசில் நிதி கிடைக் காது.

ஐந்து கட்சிகள் ஒற்றுமை யாக போட்டியிடுகிறோம். மக் கள் ஒற்றுமையை விரும்புகின் றனர்.

வடக்கு மீனவர்கள் பிரதிநி திகளை தமிழ்நாட்டுக்கு அழைத் துச் சென்று பேச்சு நடத்த நடவ டிக்கை எடுப்பேன்.

இந்த அரசு தேர்தல் ஆதாயத் திற்காக மீனவர் வாக்குகளை கவர்வதற்கு முயற்சித்தால் மீன வர்களது கடும் கோபத்திற்கு ஆளாகவேண்டி வரும்-என்றார். (அ)

# யசோதினி முல்லைத்தீவில் பிரசாரம்

முல்லைத்தீவு, நவ. 01

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் யசோதினி கருணா நிதி, முல்லைத்தீவு முள்ளிவாய்க் காலில் அஞ்சலி செலுத்தி, தேர் தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், தேர்தல் பிரசாரத்தை முன்னெ டுக்கச் சென்ற நிலையில், முள் ளிவாய்க்கால் பகுதியில் உயிரி ழந்த உறவுகளுக்காக, சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து, முல்லைத்தீவில் பிரசாரத்தில் ஈடுபட்டார். (அ)

# "மஸ்தானின் செயல்பாடு மிகவும் கீழ்த்தரமானது"

மன்னார், நவ. 01

அரசியலில் நிலைப்பதற்காக மக்களுக்கு வரும் அபிவிருத்திக ளைக் கூட தடை செய்யும் வக் கிர மனநிலையில், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் மஸ்தான் செயற்பட்டதை மறக்க முடியாதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார், தாராபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் முன்னாள் எம்.பிக்கள் 80 பேர் போட்டியிடவில்லை. வெல்ல முடியாது எனக் கருதியே இவர்கள் ஒதுங்கியுள்ளனர். அதேபோன்று, போட்டியிடும் இன்னும் சிலரை மக்கள் இம் முறை தோற்கடிக்கவும் தீர்மா னித்துள்ளனர்.

அரசியலில் நிலைப்பதற்காக வக்கிரபுத்தியுடன் செயற்படும் மஸ்தான் போன்றவர்களையும் மக்கள் நிராகரிக்க வேண்டும். தாராபுரம் மண்ணின் பெருமைக்கே இழுக்கு ஏற்படும் வகையில், இவ ரது செயற்பாடுகள் இருந்தன.

நமது பிள்ளைகள் படிப்பதற் காக பாடசாலைகளுக்கு பல கட்டடங்களை கொண்டுவந்த வேளை, ரணிலின் செயலாளரி டம் சென்று, அந்தக் கட்டடங் களைக் கட்டவிடாமல் தடை விதித்தார். இந்த அபிவிருத்தி கள் இங்கு நடந்தால், ரிஷாத் தின் அரசியல் பலமடையும் எனப் பயந்தவர்தான் இவர்.

அரசியலுக்காக பிள்ளைக ளுக்கு வரும் அபிவிருத்திகளை தடுத்துவிடாதீர்கள். இயலுமா னால், நீங்களும் பாடசாலைக ளுக்கான அபிவிருத்தியைக் கொண்டுவாருங்கள் என ரணி லின் செயலாளர், அவருக்கு அறி வுறுத்தியிருந்தார். இவற்றை யெல்லாம் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டதனாலேயே கூறுகின்றேன்-என்றார். (அ)

# தேர்தல் காலத்தில் பெரியநீலாவணையில் வேட்பாளர் ஒருவர் வீதி அமைக்கின்றார்!

## தேர்தல் சட்டம் இதற்கு அனுமதிக்கிறதா? கல்முனையில் வேட்பாளர் புஷ்பராஜா கேள்வி



அம்பாறை, நவ.01

"இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர் இந்துனேஸ் பெரிய நீலாவணையில் கடந்த வாரம் வீதி அமைத்துள்ளார். தேர்தல் கட்டளைச் சட்டத்தின் படி இப் படி செய்யலாமா? இதற்கு தேர் தல் சட்டம் அனுமதிக்கிறதா?"

-இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட் பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் நாவிதன்வெளி தவிசா ளருமான சோமசுந்தரம் புஸ்ப ராஜா கேள்வி எழுப்பினார்.

அம்பாறை மாவட்ட தெரி வத்தாட்சி அலுவலர் மற்றும் மாவட்ட உதவி தேர்தல் ஆணை யாளரின் கவனத்திற்கு இதனைச் சமர்ப்பிக்கிறேன். நடவடிக்கை எடுப்பார்களா என்றும் அவர் கேட்டார்.

கல்முனை உடையார் வீதி யில் அவரது தேர்தல் பிரசார அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பொத்துவில் வீதியில் கல்கு வாரி வைத்து ஏழை மக்களின் உழைப்பை சாறாகப் பிழிந்து கோடி கோடியாக கறுப்பு பணம் சேர்த்தவர் அவர்.

அங்குள்ள மக்கள் 20 வருடங் களில் சுவாசக் கோளாற்றால் பாதிக்கப்பட்டு 40 வருடத்தில் சாகக்கூடிய நிலைமையில் இருக் கின்றார்கள்.

இன்று தேர்தல் என்றவுடன் பெரிய நீலாவணையில் வந்து றோட்டு போடுகிறார். காசு கொடுக்கிறார். இது தேர்தல் சட்டத்தின் படி முடியுமா?

அந்த வீதிக்கு பொறுப்பான அரச திணைக்களங்கள் அல்லது உள்ளூராட்சிச் சபை அதற்கு அனுமதி கொடுத்ததா? என்று கேட்கிறேன்.

அதுமட்டுமின்றி கோடி கோடியாய் வைத்திருக்கும் கோடீஸ்வரன் இதே பாணியில் மக்களுக்கு லஞ்சம் கொடுக்கி றார்.

அவர் நினைத்திருந்தால் ஐந்து ஏக்கர் காணியை எடுத்து சூரிய மின்கலத்தை பொருத்தி வரும் வருவாயில் ஏழை மக்க ளுக்கு உதவி இருக்கலாம்.

சுனாமி மற்றும் கொரோனா காலகட்டத்தில் ஒரு சோற்றுப் பார்சல் கூட ஏழைகளுக்கு கொடுக்காதவர்கள் இவர்கள். இன்று தேர்தல் என்றவுடன் லஞ் சம் கொடுக்க வருகின்றார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு கல்முனையில் போஸ்டர் ஒட்டி இருக்கிறீர்கள். இது அழகா?

பழம்பெரும் கட்சி தாய்க் கட்சி என்று ஒற்றுமையைச் சீர் குலைத்த இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இப்படிப்பட்ட கறுப்பு பண வேட்பாளர்களை நிறுத்தி இருக்கின்றீர்களே! வெட்கம் இல்லையா? இவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்து பிரதிநிதித்துவத்தை இழக்க இருக்கின்றார்கள். கடந்த 65 வருட காலமாக இலங்கை தமி ழரசுக் கட்சி கல்முனை மக்க ளுக்கு பாரிய துரோகத்தை இழைத்து வந்ததை நாங்கள் மறந்து விட முடியாது. இன் னுமா அவர்களை நம்புவது?- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வெளியுறவுக் கொள்கையை கேள்விக்குள்ளாக்கிய அரசு!

## சாடுகின்றார் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, நவ. 01

**முக்கியத்துவம் மிக்க சர்வதேச மாநாடுகளைப் புறக்கணித்து தற்போதைய அரசாங்கம் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.**

இது சர்வதேசத்தின் மத்தியில் அரசாங்கத்துக்கு மாத்திரமின்றி முழு நாட்டுக்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் இதுவரையில் சிறந்த வெளிநாட்டு கொள்கைகள் பின்பற்றப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது அதில் சிக் கல்கள் ஏற்பட்டுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்ற ஒரு மாதத்துக்குள் மூன்று பிரதான இராஜதந்திர சர்வதேச மாநாடுகள் இடம்பெற்றுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடர், பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு, பிரிக்ஸ் மாநாடு என்பவற்றை இந்த அரசாங்கம் புறக்கணித்துள்ளது.

அரசாங்கம் அதன் வெளியுறவுக் கொள்கைகளை பலப்படுத்தியிருக்க வேண்டிய சந்தர்ப்பங்களை தவறவிட்டிருக்கிறது.

ஜனாதிபதி அல்லது வெளியுறவுத்துறை அமைச்சர் பங்கேற்றிருக்க வேண்டிய இந்த மாநாடுகளில் வெளியுறவுச் செயலாளரும், மேலதிக செயலாளரும் தூதுவருமே பங்கேற்றுள்ளனர்.

இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு விடயமல்ல.

இது சர்வதேசத்தின் மத்தியில் அரசாங்கத்துக்கு மாத்திரமின்றி முழு நாட்டுக்கும் அவப்பெயரை ஏற்படுத்தும்.

சர்வதேச ஒத்துழைப்புக்கள் அத்தியாவசியமாகவுள்ள இந்த




சந்தர்ப்பத்தில் இவ்வாறான மாநாடுகளை புறக்கணிப்பது தவறானதாகும்.

வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை இவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை.

தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் ஒரு பாதமான பக்கத்தையே இவை காண்பிக்கின்றன.

இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் அது பெரும் அழிவுக்கு வழி வகுக்கும்-என்றார்.

# அரசாங்கம் எந்த பாதையில் பயணிக்கிறது என சந்தேகம்

## ருவான் விஜயவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, நவ. 01

அரசாங்கம் எந்த பாதையில் பயணிக்கின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக முன்னாள் அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்தே அநுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக்கினர். ஆனால் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டதாக தெரியவில்லை. ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை குறைத்தல் தொடர்பிலேயே அதிகளவில் பேசுகின்றனர். நாட்டின் பொருளாதாரம் தொடர்பிலேயே அதிகளவில் சிக்கல் நிலை காணப்ப



டுகின்றது.

அரசியல்வாதிகளின் வரப்பிரசாங்கங்கள் மற்றும் ஊழல் மோசடிகளின் காரணமாகவே பொருளாதார பிரச்னை ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர். அதனை நாமும் ஏற்றுக்கொள்கின்றோம். ஊழல் மோசடிகள் நிறுத்தப்படவேண்டும். இருப்பினும் அரசாங்கம் எந்த பாதையில் பயணிக் கின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ளது-என்றார்.

(அ)

# தொடர் தோல்வி சந்தித்த ரணிலிடம் நாம் அரசியலைக் கற்கவேண்டுமா?

## பிரதமர் ஹரிணி அமரசூரிய கேள்வி

கொழும்பு, நவ. 01

பொது மக்களால் பல தடவைகள் நிராகரிக்கப்பட்டு தொடர்ச்சியாக பல தேர்தல்களில் தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து அரசியலமைப்பை கற்கவேண்டுமா என பிரதமர் ஹரிணி அமரசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய பிரதமர் அமரசூரிய, 17 முறை தேர்தலில் தோல்வியடைந்தபோதிலும், ரணில் விக்கிரமசிங்க விலகுவதாகத் தெரியவில்லை, மேலும் தனது அரசியல் வாழ்க்கையில் தொங்கிக்கொண்டிருக்கிறார்.

பொதுமக்கள் மாறிவிட்டார்கள், அவரை நிராகரித்துவிட்டார்கள் என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை போலும். இருப்பினும், நாங்கள் ஒரு புதிய பயணத்தைத் தொடங்கியுள்ளோம்.

அரசியலமைப்பின் அடிப்படையானது மக்களின் ஆணையாகும். இந்த அடிப்படைக் காரணியை புரிந்து கொள்ளாத ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு அரசியலமைப்பை கற்பிக்க முடியும்?

அரசியலமைப்பின் அடிப்படைகளை அறிந்த ஒருவர் தேர்தலை ஒத்திவைக்க மாட்டார் அல்லது தேசிய கவுன்சில் அல்லது நீதித்துறையின் முடிவுகளில் தலையிடமாட்டார். அரசி



யலமைப்பைப் பற்றி எனக்குக் கற்பிக்க குறைந்த பட்சம் இந்த அடிப்படைகளை அவர் அறிந்திருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

தமக்கு எல்லாம் தெரியும், மற்றவர்கள் அறியாதது போன்று கருதி செயற்பட்ட தலைவர்களின் செயற்பாடுகளினால் இலங்கை நாசமடைந்துள்ளது-என்றார்.

(அ)



# கொழும்பில் தீபாவளி நிகழ்வுகளில் கலந்துகொண்டார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, நவ. 01

கொழும்பில் தீபாவளி கொண்டாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாச நேற்றைய தினம் பங்கேற்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளர் திருமதி அப்சாரி சிங்கபாகு திலகரத்ன தலைமையில் பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வுகளில் அவர் இவ்வாறு பங்கேற்றார்.

# வாக்குகளைச் சிதறடிக்க நடக்கும் சதித் திட்டங்கள்

## வடிவேல் சுரேஷ் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 01

பதுளை மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை சிதறடிக்க சில சதித்திட்டங்கள் நடந்து கொண்டிருப்பதாக ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தின் ஹாலியெல கபில தோட்டத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கள நிலைமை நன்றாக இருக்கின்றது, எனினும், சில குள்ளநரிகள் சதித்திட்டம் தீட்டுகிறார்கள். எங்களை தோற்கடிப்பதற்கு, பதுளை மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை சிதறடிக்க சில சதித்திட்டங்கள் நடந்து கொண்டிருக்கிறது.

சில பேர் கங்கணம் கட்டி செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பதுளை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதியை தோற்கடிக்க வேண்டும் என்று, பதுளை மாவட்ட மக்களை அரசியல் அநாதைகளாக மாற்றவேண்டும் என்று சிலர் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள்.

எனினும், வடிவேல் சுரேஷ் இருக்கும் வரை அது நடக்காது என்பது அவர்களுக்கு தெரியவில்லை. சிலர் தங்கள் தோல்வியடைவோம் என தெரிந்தும் வாக்குகளை சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் நோக்கம் வாக்குகளை சிதறடிப்பது மட்டும் தான். இன்று பெரும்பான்மையான முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர்கள் கிராமங்களுக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது.

மக்கள் அவர்களை விரட்டுகிறார்கள். அதனால் அவர்கள் தோட்ட மக்களிடம் வாக்குகளை சேகரிக்க வருகிறார்கள். ஆனால் தோட்ட மக்களின் வாக்குகள் குறைவாகவே இருக்கின்றன. முஸ்லிம் மக்களின் வாக்குகளும் குறைவாகவே இருக்கின்றன - என்றார். (அ)

# அநுரவுக்கு நாங்களே வழி காட்டவேண்டும்!

## திலித் ஜயவீர தெரிவிப்பு

கொழும்பு, நவ. 01

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நாங்களே வழிகாட்ட வேண்டும். அவருக்கு வழிகாட்டி சரியான பாதையில் ஆட்சியை கொண்டுச்செல்ல, தனது தலைமையிலான குழுவினர் கட்டாயம் பாராளுமன்றத்துக்கு சென்றே ஆகவேண்டும்" என்று சர்வசன அதிகார கூட்டணியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டிய, படேபொல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க் கட்சியை கைப்பற்றுவதற்காகவே இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறோம். எந்தவொரு உலக நாடுகளிலும் இது போன்றதொரு அரசியல் இல்லை.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வழிகாட்ட வேண்டும். நாங்கள் அந்த வழிகாட்டியாக இருக்க விரும்புகிறோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் 200 ரூபாவுக்கு எரிபொருளை பெற்றுக்கொடுக்கவும் 40 சதவீதத்தால் மின்கட்டணத்தை குறைக்கவும் சம்பளத்தை இரு தடவைகள் அதிகரிக்கவும் அஸ்வெசுமவை 50000 ரூபாவால் அதிகரிக்கவும் நாங்களே ஜனாதிபதிக்கு வழிகாட்ட வேண்டும்.

அதனால், கடந்த காலங்களில் இருந்தது போன்ற எதிர்க் கட்சிக்கு பதிலாக மக்களுக்காக குரல்கொடுக்க கூடிய சகோதரத்துவத்துடன் கூடிய சகோதரர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் -என்றார்.

(அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



### சட்ட விதிகளை மீறி காட்சிப்படுத்தப்பட்ட

# வேட்பாளர்களின் பதாகைகளை அதிரடியாக அகற்றிய அதிகாரிகள்





மட்டக்களப்பு, நவ. 01

**தேர்தல்கள் ஆணைக்குழுவால் அறிவுறுத்தப்பட்ட தேர்தல்கள் சட்ட விதிமுறைகளை மீறும் வகையில் காட்சிப்படுத்தப்பட்ட கட்சிகளின் விளம்பர பதாகைகள் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளால் அதிரடியாக அகற்றப்பட்டன.**

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரும் மாவட்ட உதவித் தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலருமான எம். ஏ. எம். சுபியான் மற்றும் தேர்தல் பிணக்குகளை தீர்க்கும் பிரிவு உதவி மாவட்ட தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலகர் நவரூபரஞ்சனி முகுந்தன் ஆகியோரின் தலைமையில் மாவட்ட தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மட்டக்களப்பு பொலிஸார் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சிகளின் அலுவலகங்களில் தேர்தல்கள் சட்ட விதிமுறைகளை மீறும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த கட்சிகளின் விளம்பர பதாகைகள் இவ்வாறு அகற்றப்பட்டன.

பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தேர்தல்கள் சட்ட விதிமுறைகளை மீறியதன் காரணமாக மாவட்ட தேர்தல்கள் செயலகத்துக்கு தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மாவட்ட தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளால் உடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்று அதிகாரிகள் கூறினர். (எ)

# தமிழ் பாடசாலைகளுக்கு இன்று விசேட விடுமுறை

## கிழக்கு ஆளுநர் ஜயந்தலால் அறிவிப்பு

திருகோணமலை, நவ. 01

தீபாவளியை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இவ்வாறு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகவும், குறித்த தினத்துக்கான பதில் பாடசாலை எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (எ)



வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு சிறீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்றை தினம் தீபாவளி சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

# மேலைத்தேய இசைக்குழு போட்டியில் கார்மேல் பற்றிமா கல்லூரி முதலாமிடம்





கல்முனை, நவ. 01

அம்பாறை மாவட்டத்தின் புகழ் பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியானது 125ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் கல்வி மற்றும் இணைப் பாடவிதான செயல்பாடுகளில் வெற்றிகள் பலவற்றை குவித்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக கல்முனை வலய மட்டத்தில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண் மற்றும் பெண் மாணவ மேலைத்தேய வாத்திய இசைக்குழு போட்டியில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை பெற்றன.

இப்போட்டியானது கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. கடும் போட்டிகளுக்கு மத்தியில் இதில் பங்குபற்றிய ஆண் மாணவ மேலைத்தேய இசை குழு முதலாம் இடத்தையும், பெண் மாணவ மேலைத்தேய இசை குழு இரண்டாமிடத்தையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தன. (ஏ)






# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாபெரும் விளையாட்டு திருவிழா

கல்முனை, நவ. 01

மாணவர்களிடத்திலே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஏற்பாட்டிலும் டயக்கோனியா அமைப்பின் ஆதரவிலும் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ. ஜி. எம். ரிஷாத் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் விளையாட்டு திருவிழா கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி சகீலா இஸ்ஸதீன் கலந்து கொண்டதோடு கௌரவ விருந்தினராக கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எச். எம். ஜாபீர், சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எல். எம். முதர்ரிஸ் மற்றும் இந்த நிகழ்வுக்கு பொறுப்பான முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எயன் ஜப்பார், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் லைலா உடையார், நிதி உத்தியோகத்தர் குமுது பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் கல்முனைக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஏழு பாடசாலைகளின் அதிபர்கள், புத்திஜீவிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விளையாட்டுத் திருவிழாவில் பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதோடு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. போட்டியில் பங்கேற்ற பாடசாலைகளுக்கு நினைவுச் சின்னங்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. (எ)

# கல்முனை மஹ்மூத் பாலிகா பாடசாலை முன்னிலை

கல்முனை, நவ. 01

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் சித்தி பெற்று கல்முனை மஹ்மூத் பாலிகா மகளிர் கல்லூரி முன்னிலை பெற்றுள்ளது.

2023 (2024) க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் அதிகளவு 9 ஏ சித்தி பெற்ற முதல் 60 பாடசாலைகளில் 10 தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் வடக்கு மாகாணத்தில் நான்கு பாடசாலைகளும், கிழக்கு மாகாணத்தில் ஐந்து பாடசாலைகளும் உள்ளடங்கியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் தெரிவான ஐந்து பாடசாலைகளில் நான்கு பாடசாலைகள் மட்டக்களப்பு மாவட்டத்துக்குரியன. அதில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மட்டுமே அம்பாறை மாவட்டத்துக்குரியது.

இத்தரவுகளானது மகளிர் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுக்கப்பட்ட புள்ளி விவரமாகும். இவ் வெற்றியின் மூலம் கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவிகள், மாணவிகளை பல வழிகளிலும் திறன்பட

பயிற்றுவித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.(எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில் படைகள் வாபஸ்

# இந்திய - சீன ஒப்பந்தத்தை வரவேற்கிறது அமெரிக்கா

வாஷிங்டன், நவ. 01

**பதற்றங்களைக் குறைக்கும் நோக்கில் இந்தியாவும் சீனாவும் எல்லையில் படைகளை திரும்பப் பெறுவது தொடர்பான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி வருவதை அமெரிக்கா வரவேற்கிறது என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார்.**




வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, "உண்மையான கட்டுப்பாட்டு கோடு பகுதியில் மோதல் ஏற்படும் புள்ளிகளில் இருந்து படைகளைத் திரும்பப் பெறுவதற்கு இரு நாடுகளும் ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துள்ளன. எல்லையில் பதற்றங்களைக் குறைப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இது தொடர்பில் நாங்கள் இந்திய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தோம். ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த தகவல்களை பெற்றுள்ளோம். அதேநேரத்தில், இந்தியா - சீனா இடையேயான இந்த தீர்மானத்தில் அமெரிக்கா எந்தப் பங்கும் வகிக்கவில்லை" எனவும் அவர் கூறினார்.

கிழக்கு லடாக்கின் டெப்சாங் மற்றும் டெம்சோக் பகுதிகளில் இருந்து படைகளை திரும்பப் பெறுவதற்கான செயல்முறை முடிவடையும் தருவாயில் உள்ளதாக இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த பகுதிகளில் இருந்து படைகள் திரும்பப் பெறப்படுவதையும் உட்கட்டமைப்பை அகற்றுவதையும் இந்திய - சீன இராணுவத்தினர் பரஸ்பரம் சரிபார்த்து வருவதாகக் கூறப்படுகிறது.

எல்லை விவகாரங்களில் பரஸ்பர உடன்பாட்டைத் தொடர்ந்து இரு தரப்பிலிருந்தும் எல்லைப் படையினர் படைகளை திரும்பப் பெறும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று சீனாவின் வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

(எ)




# இந்துக்களின் மாதம் ஒக்ரோபர்

## அவுஸ்திரேலியா அறிவிப்பு

சிட்னி, நவ. 01

ஒக்ரோபர் மாதத்தை இந்துக்களின் பாரம்பரிய மாதமாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு இந்து மத கலாசாரம் மற்றும் மரபுகளை கொண்டாடும் வகையிலும், அங்கீகரிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

நவராத்திரி, தசரா, தீபாவளி உள்ளிட்ட முக்கிய இந்து பண்டிகைகள் பெரும்பாலும் ஒக்ரோபர் மாதத்தில் கொண்டாடப்படுவது வழக்கம். அந்த வகையில் அவுஸ்திரேலியாவின் இந்த அறிவிப்பு கலாசார முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது. அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பு உறுப்பினர் சார்ல்டன் இந்த அறிவிப்பை விடுத்தார்.

பன்முக கலாசாரத்துக்கு அவுஸ்திரேலியாவின் அர்ப்பணிப்பை சுட்டிக்காட்டும் விதமாகவும் இந்த அறிவிப்பு அமைந்துள்ளது. மேலும், அவுஸ்திரேலிய நாட்டின் சமூக கட்டமைப்பு ரீதியாக இந்துக்களின் பங்களிப்பையும் இது அங்கீகரிக்கிறது. இதன் மூலம் பழமை வாய்ந்த இந்து மத சம்பிரதாயங்கள், பாரம்பரியத்துக்கு அவுஸ்திரேலியா மதிப்பளிக்கிறது. இது உலக அரங்கில் தற்போது கவனம் பெற்றுள்ளது.

(எ)

# "சீக்கிய பிரிவினைவாதிகள் குறி வைப்பு அமித் ஷாவின் உத்தரவுதான் காரணம்"



ஒட்டாவா, நவ. 01

கனடாவில் சீக்கிய பிரிவினைவாதிகள் குறிவைக்கப்பட்டதற்கு இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் உத்தரவே காரணம் என்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு தான்தான் கூறியதாக கனடாவின் துணை வெளிவிவகார அமைச்சர் டேவிட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

காலிஸ்தான் பிரிவினைவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஆண்டு கனடாவில் கொல்லப்பட்டதற்கு நரேந்திர மோடி அரசு உதவியதாக நம்பகமான ஆதாரங்கள் இருப்பதாக அந்த நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியிருந்தார். இந்த விவகாரம் இரு தரப்பு உறவில் பெரும் விரிசல் ஏற்பட காரணமாக இருந்தது.

இந்த நிலையில், கனடாவில் சீக்கிய பிரிவினைவாதிகள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கியது அமித் ஷாதான் என்ற தகவலை வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு வழங்கியது தான்தான் என கனடாவின் வெளிவிவகார துணை அமைச்சர் டேவிட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

"ஊடகவியலாளர் என்னை அழைத்து, அந்த நபரா என்று கேட்டார். அந்த நபர் தான் என்பதை நான் உறுதி செய்தேன்" என்று டேவிட் மொரிசன் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு குறிப்பிட்டுள்ளார். அதேநேரத்தில், அமித் ஷா மீதான தனது குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரங்களையும் அவர் வழங்கவில்லை.

(எ)

# ஜனாதிபதி தேர்தல் கருத்து கணிப்புகள் கமலா ஹாரிஸுக்கு குறையும் ஆதரவு

வாஷிங்டன், நவ. 01

அமெரிக்காவில் இம்மாதம் 5ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயகக் கட்சி சார்பில் கமலா ஹாரிஸும், குடியரசுக் கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில் தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்புகள் வெளிவந்துள்ளன. இதில் கமலா ஹாரிஸுக்கு 44 சதவீத மக்களும், டொனால்ட் ட்ரம்புக்கு 43 சதவீத மக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ரொய்ட்டர் நிறுவனம் மற்றும் ஐ. பி. எஸ். ஓ. எஸ். அமைப்பு இணைந்து, கடந்த வெள்ளி முதல் ஞாயிறு வரையில் 3 நாள் தேர்தல் கருத்துக் கணிப்பை மேற்கொண்டது. அமெரிக்க முழுவதும் 1,150 இளம் வாக்காளர்களிடையே இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இதன் முடிவுகளை தற்போது அந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது.



கடந்த ஜூலை மாதம் கமலா ஹாரிஸ் தேர்தல் களத்தில் இறங்கியபோது அவருக்கு ஆதரவு அதிகம் இருந்தது. ஆனால், செப்ரெம்பருக்கு பிறகு அவருக்கான ஆதரவு குறையத் தொடங்கியுள்ளது என்பது தற்போதைய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது. தற்போதைய கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸுக்கு 44 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். இது ட்ரம்புக்கான ஆதரவை விட ஒரு சதவீதம்தான் அதிகமாகும். ஒக்ரோபரில் நடத்தப்பட்ட முந்தைய கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸ் 2 சதவீதம் முன்னிலையில் இருந்தார்.

அமெரிக்காவின் பொருளாதாரம், வேலைவாய்ப்பு உருவாக்கம் சார்ந்து யாருடைய அணுகுமுறை சிறப்பாகவுள்ளது என்று கேட்கப்பட்டதற்கு 47 சதவீதம் பேர் ட்ரம்பைக் குறிப்பிட்டுள்ளனர். 37 சதவீதம் பேர் கமலா ஹாரிஸைக் குறிபிட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனநாயகம், அரசியல் பிரச்னைகளை கையாளுவதில் சிறந்து விளங்குவதாக கமலா ஹாரிஸுக்கு 40 சதவீதம் பேரும் ட்ரம்புக்கு 38 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். முந்தைய கருத்துக் கணிப்பில் இந்தப் பிரிவில் கமலா ஹாரிஸ், ட்ரம்பைவிட 7 புள்ளிகள் முன்னிலையில் இருந்தார். ஆனால், இம்முறை 2 புள்ளிகள் மட்டுமே முன்னிலையில் உள்ளார். அகதிகள் பிரச்னையை கையாளுவதில் ட்ரம்ப் அணுகுமுறை சிறப்பாக இருப்பதாக 48 சதவீதம் பேரும், கமலா ஹாரிஸுக்கு 33 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். (எ)

# அதிக குழந்தைகள் பெறும் தம்பதியருக்கு சலுகைகள்

பீஜிங், நவ. 01

அதிக குழந்தைகள் பெற்றுக் கொள்ளும் தம்பதிகளை ஊக்குவிக்கும் வகையில் புதிய சலுகைகளை சீனா அறிவித்துள்ளது.

குழந்தைப்பேறு மானியம், வீட்டு வசதி, கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவை தொடர்பான சலுகைகள், வருமானவரி சலுகைகள் உள்ளிட்ட 13 சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

(எ)

# அணு ஆயுதங்கள் தாங்கிய கப்பல் கட்டும் தளத்தில் தீ!

லண்டன், நவ. 01



அணு ஆயுதங்கள் தாங்கிய நீர்மூழ்கி கப்பல் கட்டும் தளத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

இங்கிலாந்து கடற்படையில் அணு ஆயுதங்கள் தாங்கிய நீர்மூழ்கி கப்பல்கள் உள்ளன. இந்த கப்பல் கள் கட்டும் தளம் அந்த நாடின் கம்பிரியா நகரின் பாரோ இன் பெர் னஸ் என்ற பகுதியில் அமைந்துள்ளது.

இந்த நிலையில், கம்பிரியாவில் உள்ள அணு ஆயுதம் தாங்கிய நீர்மூழ்கி கப்பல் கட்டும் தளத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில் 2 பேர் காயமடைந்தனர்.

மேலும், இந்தத் தீ விபத்தால் அணுக் கசிவு எதுவும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

(எ)

# திடீர் வெள்ளத்தில் சிக்கி ஸ்பெயினில் 95 பேர் பலி!

மட்ரிட், நவ. 01

ஸ்பெயின் நாட்டின் வெலன்சியா மாகாணத்தில் திடீரென கனமழை பெய்தது. இதனால் பல்வேறு ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

வெள்ளம் நகரின் பல்வேறு பகுதிகளை சூழ்ந்தது.

கனமழை காரணமாக ஆறுகளில் ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி 95 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். அதேவேளை, கனமழை காரணமாக பல பகுதிகளில் நிலச்சரிவும் ஏற்பட்டது. வீடுகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ள நிலையில் மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2024

**"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."**

தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி



# ஆளுக்கொரு மரம் நடுவோம்
# நாளுக்கொரு வரம் பெறுவோம்

**கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;**
**தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!**

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள்...

திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று அந்தந்த மாகாண ஆளுநர்கள் உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

இந்தநிலையில், வடக்கு மாகாணத்தில் பாடசாலைகள் இயங்குமா என்பது தொடர்பில் குழப்பம் ஏற்பட்டது. இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனிடம் இது தொடர்பில் கேள்வி எழுப்பியபோது, "பாடசாலைகள் வழமைபோன்று இயங்கும்", என்று தெரிவித்தார். (ஐ-05)

## வயாவிளான்...

திறந்து வைக்கவுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயமாகவும் இராணுவ முகாமுக்கு அருகாமையிலும் உள்ள இந்த வீதி நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தது.

அண்மையில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்தித்தபோது, குறித்த வீதியை திறந்து வைத்து மக்களின் போக்குவரத்துக்கு வழிசமைக்குமாறு கேட்டிருந்தார். இதன்படியே, இந்த வீதியை திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வடக்கு...

அத்துடன், இந்த மாதத்தில் 3 தாழமுக்க நிகழ்வுகள் தோன்ற வாய்ப்புள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 6 அல்லது 7ஆம் திகதி இலங்கைக்கு கிழக்காக வங்காள விரிகுடாவில் இலங்கை முழுவதையும் தன் வெளி வளையத்துக்குள் உள்ளடக்கியதாக காற்றுச் சுழற்சி ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இதனால் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாட்டில்...

கலைக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஆட்சியை கைப்பற்றி 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில் சில ஊடகங்களும் சில அரசியல்வாதிகளும் பலமான அதிகாரத்தை வழங்காமல் ஸ்திரமின்மையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

சுற்றுலா தலங்களில் நடத்தப்படக் கூடிய தாக்குதல் குறித்து இந்திய புலனாய்வு அமைப்புகள் உளவுத்துறை அறிக்கையை வழங்கியதாகவும் தாக்குதல்களை நடத்த சில நபர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் வழங்குவதாகவும் ஊடகங்களில் வெளியான செய்திகளை அவர் நிராகரித்தார்.

அரச துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதாக சில அரசியல்வாதிகள் கூறுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும் ஆதரவளித்த அரச ஊழியர்களுக்கு இடையில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காகவே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமைச்சரவை முடிவு எடுக்கப்பட்டாலும் அல்லது நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், முதல் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்போம் - என்றார்.

சில ஊடக நிறுவனங்கள் பழைய ஒழுக்கக்கேடான நடைமுறைகளில் சிக்கித் தவிக்கின்றன. இதழியலில் புதிய ஜனநாயக அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும். நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு ஊடக நிறுவனங்கள் முக்கியமானவை. ஊடக நிறுவனங்கள் பொறுப்பான அறிக்கையிடல் நடைமுறையை ஏற்றுக்கொள்ளும் - என்றார். (ஐ)

# அபிவிருத்தி தேவைகளை ஆராய்ந்த பின்னரே உதவி!

## சீனத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 01

அடுத்த வருடத்தில் சீன அரசாங்கம் இலங்கையின் புதிய அரசாங்கத்தின் அபிவிருத்தி தேவைப்பாடுகளை முழுமையாக ஆராய்ந்து செயல்படவுள்ளது என்று இலங்கைக்கான சீன தூதுவர் கீ ஷென்கொங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் சீனா அவதானம் செலுத்தி வருகிறது.

அந்தவகையில், மனித வளம், சகோதரத்துவத்தை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் சீன அரசாங்கம் கவனம் செலுத்தும் - என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக 40 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை சீனா வழங்கியுள்ளது. முன்னதாக 3 கோடி ரூபாய் நன்கொடை வழங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கைக்கான புதிய சேவையை ஆரம்பித்த என்டர் எயார் நிறுவனம்

கொழும்பு, நவ. 01

போலந்தில் இயங்கும் மிகப்பெரிய தனியார் விமான நிறுவனமான என்டர் எயார் இலங்கைக்கும் போலாந்துக்கும் இடையிலான புதிய விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

வார்சா - கொழும்பு இடையிலான இந்த புதிய விமான சேவை எதிர்வரும் 2025 மார்ச் இறுதி வரை தொடர்ந்து இயங்கும் என என்டர் எயார் கூறியுள்ளது.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான பயண மற்றும் சுற்றுலா இணைப்புகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதன் முதல் விமானமானது நேற்று முன்தினம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

விமானம் விமான நிலையத்தில் தரையிறங்கியதும், அதற்கு நீர் வணக்கம் செலுத்தப்பட்டதுடன், இலங்கை சுற்றுலாத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரம்பரிய நடன நிகழ்ச்சி மூலம் அதில் பயணம் மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தந்த பயணிகள் அன்புடன் வரவேற்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சப்ரகமுவ பல்கலை விடுதி பிரச்னை குறித்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 01

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விடுதி பிரச்னைக்கு தீர்வு கோரி, நேற்று முன் தினம் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் இருந்து நேற்று முன் தினம் பேரணியாக பம்பஹின்ன சந்திவரை சென்று அங்கு மாணவர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு பதுளை பிரதான வீதி பம்ப ஹின்ன சந்தியில் இடையூறு ஏற்பட் டது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விடுதி பிரச்னை நீண்ட காலமாக நிலவி வருவதாகவும், அதற்கான தீர்வு வழங்குவதற்கு எந்தவொரு அரசாங்கமும் செயற்படவில்லை எனவும் மாணவர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாடு முழுவதும் நேற்று தீபாவளி கொண்டாட்டம்!



யாழ்ப்பாணம், நவ. 01

நாடு முழுவதும் இந்து மக்கள் நேற்று தீபாவளி பண்டிகையை அமைதியான முறையில் கொண்டாடினார்கள். நேற்றைய தினம் ஆலயங்களில் சிறப்பு பூசை வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபட்டனர்.

சிறுவர்களும் இளைஞர்களும் பட்டாசுகளை வெடித்தும் தின்பண்டங்களை பகிர்ந்தும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

யாழ்ப்பாணத்திலும் அனைத்து ஆலயங்களிலும் நேற்று விசேட பூசைகள் வழிபாடுகள் நடைபெற்றன. பொதுமக்கள் பக்திபூர்வமாக வழிபாட்டில் ஈடுபட்டனர். வண்ணார்பண்ணை பெருமாள் ஆலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், துன்னாலை வல்லிபுரநாதர் ஆலயங்களில் நரகாசூரன் சம்ஹாரமும் நடைபெற்றது.

இதேபோன்று, வடக்கு, கிழக்கு எங்கும் கொழும்பு மற்றும் மலையக பிரதேசங்கள் உட்பட நாடு முழுவதும் இந்து தமிழ் மக்கள் தீபாவளி பண்டிகையை கொண்டாடினார்கள். (ஐ)

## ரூ.100 கோடி...

கைப்பற்றியுள்ளனர்.

மொனராகலை - செவனகலை பிரதேசத்தில் இந்தப் போதைப் பொருளை விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர். விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. (ஐ)

## எரிபொருட்களின்...

ஏனைய எரிபொருட்களின் விலைகளில் மாற்றமில்லை. 92 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் 311 ரூபாயாகவும் ஓட்டோ டீசல் லீற்றர் 283 ரூபாயாகவும் மண்ணெண்ணெய் லீற்றர் 183 ரூபாயாகவும் விற்பனையாகும்.

இதேவேளை, சினோபெக், ஐ. ஓ. சி. நிறுவனங்களும் எரிபொருட்களின் விலைகளை சிபெற்கோவின் விலைக்கு நிகராக மாற்றியமைத்துள்ளன. (ஐ)

## லொஹான்...

கடந்த வாரம் மிரிஹான பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது குறித்த வாகனம் மிரிஹானவில் உள்ள முன்னாள் அமைச்சரின் மனைவியின் வீட்டில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. (அ)

## ஆராய்வதற்கு...

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

என்றாலும், இத்திட்டத்துக்கு கடுமையான எதிர்ப்புகள் வெளியாகியிருந்ததுடன், தற்போதைய அரசாங்கமும் இத்திட்டத்தை மீள் பரிசீலனை செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி இதுதொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தும் இருந்தார்.

காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்திற்கு கடந்த அமைச்சரவை வழங்கிய அனுமதியை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி வன ஜீவராசிகள், இயற்கை வளங்கள் பாதுகாப்பு சங்கம், சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் உள்ளிட்ட சில தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் திட்டத்தை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை உயர்நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு இடையே காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் குறித்து ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் கலந்துரையாடலை நடத்த உள்ளது.

பொதுத் தேர்தலின் பின்னர் நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் திட்டம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளது.

இந்த நிலையில், காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்த இலங்கை அரசாங்கத்துக்கு புதுடில்லியில் இருந்து அழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட குழுவொன்று புதுடில்லி செல்ல உள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## தேங்காய் உற்பத்தி சரிவு 2025 ஏப்ரல் வரை நீடிக்கும்!

கொழும்பு, நவ. 01

நாட்டில் தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள சரிவு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நயனி ஆராச்சிகே-

உரிய நேரத்தில் மழையின்மை மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நாட்டில் தேங்காய் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தேங்காய் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஏற்றுமதி நோக்கங்களுக்காக தேங்காய் கருவை இறக்குமதி செய்வது தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## 23 அமைச்சு இல்லங்களின் நீர் கட்டணம் நிலுவையில்!

கொழும்பு, நவ. 01

அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 23 நீர் விநியோகங்களில் சுமார் 50 இலட்சம் ரூபாயை கடந்த வருட இறுதியாகும் போதும் பெற்றுக் கொள்ள தவறியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மக்கள் பிரதிநிதிகளிடம் இருந்து செலுத்தப்படவேண்டிய நிலுவை நீர்க் கட்டணத்தை பெற்றுக் கொள்ள முடியவில்லை என பாராளுமன்ற பொதுச் செயலாளர் அறிவித்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளின் தனியார் வீடுகளில் காணப்படும் நிலுவைத் தொகையை சாதாரண வாடிக்கையாளர்கள் எனக் கருதி பெற்றுக்கொள்வதாக, இந்த நிலுவைத் தொகை தொடர்பில் நீர் வழங்கல் சபை தெரிவித்துள்ளது.

நிலுவைத் தொகையை செலுத்தத் தவறும் இடங்களில் நீர் வழங்கலை நிறுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் நீர் வழங்கல் சபை கூறியுள்ளது.

இவ்வாறு கட்டணம் செலுத்தத் தவறி நிலுவையில் காணப்படும் தொகையை பெற்றுக்கொள்ள அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கணக்காய்வு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளது. (அ)

## இந்திய சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையில் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 01

இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த மாதத்தின் 27ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 32,097 இந்திய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அத்துடன், பிரித்தானியாவில் இருந்து 9,113 பேரும், ஜேர்மனியிலிருந்து 7,609 பேரும் நாட்டுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இந்த மாதத்தின் முதல் 27 நாட்களில் 117,141 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.(அ)




# எந்தவோர் அமைச்சருக்கும் அரசு கொழும்பில் வீடுகளை வழங்காது!

### ஜனாதிபதி அநுரகுமார திட்டவட்டம்



கொழும்பு, நவ. 01

**கிராமிய வறுமையை ஒழிப்பதே தற்போதைய அரசாங்கத்தின் முக்கியமான பணி என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

**எதிர்வரும் பாராளுமன்றத்தில் எந்தவொரு அமைச்சருக்கும் அரசாங்கம் கொழும்பில் வீடுகளை வழங்காது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.**

அமைச்சர்கள் மக்களுக்கு சேவை செய்வதற்கு அவர்களுக்கு நெருக்கமாக இருக்கவேண்டும் என ஜனாதிபதிகுறிப்பிட்டார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான இணைப்பாக தனது பங்கை மாற்றியமைக்கும் அமைச்சரவையும் அரசாங்கமும் நவம்பர் 14ஆம் திகதிக்கு பின்னர் உருவாக்கப்படும்.

மாவட்டத்தில் உள்ள மக்களின் பிரச்னைகளுக்கு அன்றாடம் தீர்வுகளை வழங்குவதற்கு மக்களுக்கு நெருக்கமான மக்கள் தலைவர்களை கட்டியெழுப்புவது அவசியமாகும்.

மக்களிடம் இருந்து தொலைவில் உள்ள தலைவர்கள் அல்லர். வாக்குகளை பெற்று கொழும்பில் இருக்கும் தலைவர்கள் அல்லர்.

அதனால்தான் எந்த அமைச்சருக்கும் கொழும்பில் வீடுகள் இல்லை. அரசாங்கம் தரப்போவதும் இல்லை.

கிராமத்திற்கு வாருங்கள், கிராமத்தின் பிரச்னைகளைப் பாருங்கள். மக்களைத் திரட்டி இந்தப் பணியைச் செய்யுங்கள்.

இலங்கையில் இவ்வாறான அரசாங்கங்கள் உருவாகவில்லை. கிராமப்புற வறுமையை ஒழிப்பதே தேசிய மக்கள் சக்தி அரசின் தலையாய பணியாகும் - என்றார். (அ)

# பொலிஸாரின் செயல்பாடுகளை காணொலி எடுப்பதற்கு அனுமதி

கொழும்பு, நவ. 01

பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை காணொளி காட்சிப்படுத்துவதற்கு பொது மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பின் புலனாய்வு ஊடக இணையத்தளம் ஒன்றின் தகவல்படி, சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் இது தொடர்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பொதுமக்களின் இத்தகைய நடவடிக்கைகளை சட்டவிரோதமானதாகவோ அல்லது சட்டத்திற்கு எதிரானதாகவோ கருதக்கூடாது என பதில் பொலிஸ் மா அதிபர் அந்த உத்தரவில் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், பொதுமக்களால் காட்சிப்படுத்தப்படும் காணொளிகள் நாட்டின் சட்டங்களின்படி, குற்றங்கள் மற்றும் சிவில் வழக்குகளில் ஆதாரமாக பயன்படுத்தப்படலாம் என்றும் பதில் பொலிஸ மா அதிபர் கூறியுள்ளார்.

அண்மையில் குருநாகல் - வாரிய பொல பிரதேசத்தில் விபத்தில் சிக்கிய முன்னாள் அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் வாகனத்தை காணொளிப்படுத்தியமைக்காக, பொலிஸ் அதிகாரி ஒருவரை அச்சுறுத்திய சம்பவத்தின் பின்னணியில் பதில் பொலிஸ் மா அதிபரின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக குறித்த பொலிஸ் அதிகாரியின் செயல்பாடுகள் தொடர்பில் இலங்கையின் பொது பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத்தும் கண்டனம் தெரிவித்திருந்தார். (அ)

# மலையக பகுதிகளில் அமைதியான தீபாவளி




கொழும்பு, நவ. 01

மலையக மக்கள் சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீபாவளி பண்டிகையை நேற்று வெகுவிமரிசையாக கொண்டாடினார்கள்.

ஹற்றன் பகுதியில் ஹற்றன் அருள் மிகு ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குருக்கள் ஷன் மதுரன் குருக்கள் தலைமையில் தீபாவளி விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன.

விசேட பூசை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பொது மக்களும் ஈடுபட்டனர். அத்தோடு மலையகத்தில் பல ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இணையவழி மோசடிகளில் ஈடுபட்ட 130 சீனர்களின் பிணை நிராகரிப்பு!

கொழும்பு, நவ. 01

இணையவழி மோசடிகளில் ஈடுபட்ட நிலையில் கண்டி - குண்டசாலை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்ட 130 சீனப் பிரஜைகளின் பிணை கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிணை கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான 3 சட்டத்தரணிகள் பிணை கோரிக்கையை முன்வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய குறித்த 130 சீனப் பிரஜைகளும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் பல்லேகல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் அவர்கள் முன்வைத்த பிணை கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org